செ.வெ.எண்: 08 நாள்: 04.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள "அனைத்து மத வழிப்பாட்டு தலங்களுக்கு" வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் செல்ல ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை பொதுமக்களுக்கான தரிசனம் மற்றும் அனைத்து மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் முற்றிலுமாக தடை செய்யப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழக அரசின் வழிகாட்டுதலின் பேரில் கொரோனா நோய் தொற்று மூன்றாம் அலை பரவுவதை தடுக்கும் பொருட்டு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சில வழிப்பாட்டு ஸ்தலங்களுக்கும் மற்றும் கடற்கரை பகுதிகளுக்கும் பொது மக்கள் செல்வதற்கு ஏற்கனவே அனுமதி இல்லை என்று ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, நிலவிவரும் கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் தொடர்ச்சியாக, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள **"அனைத்து மத வழிப்பாட்டு தலங்களிலும்"** வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை பொதுமக்களுக்கான தரிசனம் மற்றும் அனைத்து மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் முற்றிலுமாக தடை செய்யப்படுகிறது. ஆன்லைன் மூலம் பக்தர்களுக்கு தரிசனம் மற்றும் அந்தந்த மத ஆகம விதிகளின்படி நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் கோவில் பணியாளர்கள் மூலம் நடைபெறுவதற்கு தடை ஏதுமில்லை.

மேலும், ஆகஸ்ட் 10 மற்றும் 11 ஆம் தேதி **ஆடி பூரத்தை** முன்னிட்டும் திருக்கோவில்களில் பொதுமக்களின் தரிசனத்திற்கும் அனுமதி இல்லை. வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருத்தல பேராலயத்திற்கு வெளியூரிலிருந்து **பொதுமக்கள் பாத யாத்திரையாக** வருவதற்கும் தடை விதிக்கப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அனைத்து கடற்கரை பகுதிகளிலும் பொதுமக்கள் கூடுவதற்கு ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை அனுமதி இல்லை.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்கும்படி நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் **மருத்துவர். அ. அருண் தம்புராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் அன்புடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**